முற்பகல் 11-50

4. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற வேலூரைச் சேர்ந்த திரு. சதீஷ்குமாருக்கு மாண்புமிகு முதலமைச்சர் ரொக்கப் பரிசு வழங்கியதற்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, என்ன? (குறுக்கீடு) விளக்கமாகச் சொல்லக்கூடாது. என்ன விஷயம் என்று சொல்லுங்கள்.*

திரு. ம. கலை அரசு: *நன்றி சொல்லப் போகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்காட்லாந்து, கிளாஸ்கோ நகரில் நடந்து கொண்டிருக்கும் காமன்வெல்த் போட்டியில், தமிழகத்தைச் சார்ந்த, குறிப்பாக வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியைச் சேர்ந்த பளு தூக்கும் வீரர் சதீஷ்குமார் தங்கப் பதக்கம் வென்றுள்ளார் என்கின்ற செய்தி தமிழக மக்களுக்குப் பெருமையைச் சேர்த்துள்ளது. ஏற்கெனவே இரண்டு முறை காமன்வெல்த் சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்துகொண்டு, இரண்டு முறையும் வென்றுள்ளார்கள். தங்கப் பதக்கம் வென்ற வேலூர் தங்கம் சதீஷ்குமாரைப் பெருமைப்படுத்தும் வகையில், ஊக்கப்படுத்தும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர், தங்கத் தலைவி, புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) பொன் மனம் படைத்த, தாயுள்ளம் கொண்ட, உலகம் போற்றும் சமூக சேவகி அன்னை தெரசா அவர்களால் 'பெண்ணினத் திலகம்' எனப் பாராட்டப்பெற்ற மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.50 இலட்சம் ரொக்கப் பரிசு வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தங்கம் சதீஷ்குமாரைப் பெருமைப்படுத்தி இருக்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவிப்பு மகிழ்ச்சியளிக்கிறது; திறமைக்கு முதலிடம் கொடுத்துப் பாராட்டியது மகிழ்ச்சியளிக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய பாராட்டும், பரிசும் தங்கத்திற்கு அளிக்கப்பட்டுள்ள வைரக் கிரீடமாக அமைந்திருக்கிறது என்பதைச் சொல்லி, வேலூர் மாவட்ட மக்களின் சார்பாக நன்றி மலர்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*